நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னூர்

**முன்னிலை: – திருமதி. R. கீதா, பி.ஏ, பி.எல்.,**
**விரைவு நீதித்துறை நடுவர், குன்னூர்.**
**(FAC) நீதித்துறை நடுவர், குன்னூர்.**

2026 – ஆம் ஆண்டு ஜீன் மாதம் 22 – ஆம் நாள் திங்கள்கிழமை
(திருவள்ளுவராண்டு 2053 சுபகிருது வருடம் ஆனி 01 – ஆம் நாள்)

**சுருக்கு விசாரணை வழக்கு எண்.176/2025**
**CNR.No.TNNS050002502025**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | - | அரசுதரப்பில் காவல் உதவி ஆய்வாளர் கொலக்கொம்பை காவல்நிலையம் **குற்ற எண்.07/2025.** |
| குற்றம் சாட்டப்பட்டவர்கள் | – | A1 - கிஷோர், (வயது - 31 (1994)) த/பெ. கிருஷ்ணன், க.எண்.4/383, சேலாஸ், காட்டேரி, உலிக்கல் (அஞ்சல்), குன்னூர்.<br><br>A2 - நாகராஜ், (வயது - 49 (1976)) த/பெ. வேலு, க.எண். 12/158, மகாராஜா, சன்னிசைடு, கோடேரி (அஞ்சல்), குன்னூர். |
| வனையப்பட்ட குற்றம் | – | A1 & A2 – U/s. 4(1) TNOPPD Act, 192 BNS. |
| தண்டிக்கப்பற்ற குற்றம் | – | இல்லை. |
| குற்றம் நிகழ்ந்த நாள் | – | 31.01.2025 |
| தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | – | 31.01.2025 |
| எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | – | A1 – 03.02.2025<br>A2 – 24.02.2025 |
| எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | – | A1 – 06.02.2025 (As per the order of this court in CMP.No.242/2025, dated.06.02.2025) |
| வழக்கு இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | – | 21.04.2025 |
| குவிமுச.பிரிவு.240–இன் கீழ் எதிரியிடம் குற்றச்சாட்டு குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள் | – | 15.05.2025 |

| | | |
|---|---|---|
| சாட்சிகள் விசாரணை தொடங்கிய நாள் | – | |
| சாட்சிகள் விசாரணை முடிவடைந்த நாள் | – | 22.05.2026 |
| குவிமுச.பிரிவு.311–இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விவரம் | – | -Nil- |
| குவிமுச.பிரிவு.313(1)(ஆ)-இன் கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | – | 01.06.2026 |
| தலைமறைவு எதிரிகள் குறித்த விவரம் | – | -Nil- |
| நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விவரம் | – | -Nil- |
| தீர்மானம் | – | A1 & A2 – U/s. 4(1) TNOPPD Act, 192 BNS –இன் கீழான குற்றத்திற்கு எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானிக்கப்படுகிறது. |
| முடிவு | – | **இறுதியாக,** A1 & A2 – U/s. 4(1) TNOPPD Act, 192 BNS –இன் கீழான குற்றம் அரசுதரப்பில் போதிய சாட்சிய சான்றாவணங்கள் மூலம் சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு நிருபிக்கப்படவில்லை என்பதால் எதிரிகளை மேற்படியான குற்றத்திற்கு குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து கு.வி.மு.ச.பிரிவு. 255(1)–இன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br><br>இவ்வழக்கில் **பி.ஆர்.19/2025 -** இல் தாக்கல் செய்யப்பட்டுள்ள துண்டு பிரசுரம் சுவரொட்டி ஒன்று (கிழிந்த நிலையில் உள்ளது) அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.ஆ.2 நீதிமன்ற பொறுப்பில் இருப்பதை மேல்முறையீடு காலத்திற்குப்பின் அழிக்க உத்தரவிடப்படுகிறது. |

சாட்சிகள் விசாரணை தொடங்கிய நாள்:

| முதல்விசாரணை | குறுக்குவிசாரணை |
|---|---|
| PW.1 – 03.07.2025 | 03.07.2025 |
| PW.2 – 03.07.2025 | 03.07.2025 |
| PW.3 – 25.08.2025 | 25.08.2025 |
| PW.4 – 11.09.2025 | 11.09.2025 |
| PW.5 – 29.09.2025 | 29.09.2025 |
| PW.6 – 29.10.2025 | -- |
| PW.7 – 22.05.2026 | 22.05.2026 |

| | | |
|---|---|---|
| | | எதிரிகள் ஏற்கனவே பிணையில் இருந்து வந்துள்ள நிலையில் மேல்முறையீட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல்முறையீடு செய்ய வில்லையெனில் எதிரிகளின் பிணை பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப் படுகிறது. |

இவ்வழக்கு 19.04.2022 –ம் தேதியன்று A1 & A2 – U/s. 4(1) TNOPPD Act, 192 BNS – இன் கீழ் இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இறுதியாக 12.06.2026 அன்று விசாரணைக்கு வந்த போது அரசுதரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–I திரு. R. தங்கராஜ், பி.ஏ, பி.எல்., அவர்கள் ஆஜராகியும் 1, 2 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. V. செந்தில்குமார், பி.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும் இதுநாள் வரை விசாரணை செய்தும் இருதரப்பு வாதங்களையும் கேட்டு வழக்கு ஆவணங்களை பரிசீலித்தும் இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீ ர் ப் பு ரை

### 1. கொலக்கொம்பை காவல்நிலைய உதவி ஆய்வாளர் குவிமுச.பிரிவு.173–இன் எதிரிகளின் மீது தாக்கல் செய்யப்பட்ட குற்ற அறிக்கையின் விவரம் :–

கடந்த 31.01.2025 – ஆம் தேதி மாலை 17.00 மணியளவில் கொலக்கொம்பை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மணியாபுரம் பேருந்து நிறுத்தத்தில் 1, 2 எதிரிகள் ஒன்று சேர்ந்து எந்தவித அனுமதியின்றி பொதுஇடத்தின் அழகை சீர்குலைக்கும் வகையில் துண்டு பிரசாரத்தை பொது இடமான மணியாபுரம் பேருந்து நிறுத்தத்தில் ஒட்டியுள்ள குற்றத்திற்காக 1, 2 எதிரிகள் சட்டப்பிரிவு. 4(1) TNOPPD Act – இன் படியும், பின்னிட்டு அதே சம்பவத்தின் தொடர்ச்சியாக, 1, 2 எதிரிகள் ஒன்று சேர்ந்து 04.02.2025 – ஆம் தேதி திருப்பரங்குன்றத்தில் திருப்பரங்குன்ற மலையை காக்க இந்து சமயம் சார்பாக போராட்டம் நடத்தப்போவதாகவும் அதில் இந்து மதத்தை சேர்ந்தவர்களை கலந்து கொள்ளுமாறு இந்து சமுதாய மக்களிடம் கோபத்தை தூண்டி கலகத்தை செய்ய சட்ட விரோத வாசகங்கள் அடங்கிய துண்டு பிரசூரங்களை விநியோகித்து போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ள குற்றத்திற்காக 1, 2 எதிரிகள் சட்டப்பிரிவு. 192

BNS – இன் படியும் குற்றம் புரிந்துள்ளதாகவும் கொலக்கொம்பை காவல்நிலைய காவல் உதவி ஆய்வாளரால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. 1, 2 எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பி நீதிமன்றத்தில் ஆஜரானபின் ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச.பிரிவு.207–இன் படி இலவசமாக எதிரிகளுக்கு வழங்கப்பட்டு, சந்தர்ப்பம் அளிக்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, 1, 2 எதிரிகள் மீதான சட்டப்பிரிவுகள். 4(1) TNOPPD Act, 192 BNS – இன் கீழான குற்றத்தினை விளக்கி கூறி வினவியபோதும் எதிரிகள் குற்றத்தை மறுத்தார்கள். எனவே அரசுதரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

3. அரசு தரப்பில் **அ.சா.1** முதல் **அ.சா.7** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, **அ.சா.ஆ.1** மற்றும் **அ.சா.ஆ.10** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. சான்றுபொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரணை செய்யப்படவில்லை.

**<u>4. அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக புலப்படும் வழக்கின் சுருக்கம் :–</u>**

(i) **அ.சா.5** திரு. மகேஷ்குமார், தலைமை காவலர், தனது சாட்சியத்தில், கடந்த 31.01.2025 – ஆம் தேதி 17.00 மணிக்கு நிலைய ஆஜரில் இருந்தபோது அதிகரெட்டி கிராமம், 2 – கிராமம் நிர்வாக அலுவலர் அ.சா.1 சுபத்ரா நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான **அ.சா.ஆ.1** புகார் மனுவைப்பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.07/2025, பிரிவுகள். 292, 196(1)(a) of BNS r/w 4(1) The Open Place Prevention of disfigurement Act – இன் கீழ் **அ.சா.ஆ.6** முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், முதல் தகவல் அறிக்கையுடன் புகார் மனுவை இணைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், இதர நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை பொறுப்பு ஆய்வாளர் திரு. சதீஷ் அவர்களின் பார்வைக்கு வைத்தேன் என்று கூறி சாட்சியமளித்துள்ளார்.

(ii) கொலக்கொம்பை காவல் நிலைய ஆய்வாளராகிய அ.சா.7 தனது சாட்சியத்தில், தான் விடுமுறையில் சென்றதால் குன்னூர் நகர காவல் ஆய்வாளர் தனது பணியை கூடுதல் பொறுப்பு வைத்ததாகவும், அப்பொழுது அவர் அ.சா.5 அவரது பார்வைக்கு வைத்த வழக்குக்கோப்பினை அன்றையதினமே எடுத்துக்கொண்டு மாலை 17.15 மணிக்கு சம்பவஇடம் சென்று சாட்சிகள் முனுசாமி (அ.சா.3), ராமஜெயம் (அ.சா.4) ஆகியோர் அடையாளம் காட்டிய மணியாபுரம் பேருந்து நிறுத்தத்தினுள் வடக்குபுறமுள்ள சுவரில் துண்டு பிரசுரம் ஒட்டப்பட்டிருந்ததை சாட்சிகள் முன்னிலையில் பார்வையிட்டு **அ.சா.ஆ.3** பார்வை மகசர் தயார் செய்தும் **அ.சா.ஆ.7** மாதிரி வரைபடம் வரைந்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றதாகவும், பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் 18.15 மணிக்கு மேற்படி பேருந்தினுள் ஒட்டப்பட்டிருந்த துண்டு பிரசுரத்தை **அ.சா.ஆ.8** கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றியும், பின்னிட்டு சாட்சிகள் சுபத்ரா (அ.சா.1), கருணாகரன் (அ.சா.2), நாகராஜ் (அ.சா.6), முனுசாமி (அ.சா.3), ராமஜெயம் (அ.சா.4) ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

(iii) மேலும், கைப்பற்றிய தடய சொத்தை **அ.சா.ஆ.9** படிவம் – 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், பின்னர் இவ்வழக்கை கொலக்கொம்பை ஆய்வாளராகிய தான் 03.02.2025 – ஆம் தேதி தனது விடுப்பு முடிந்து பணியில் சேர்ந்த பின்னர் இவ்வழக்கை தனது மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட சம்பவஇடத்தை சாட்சிகளை விசாரணை செய்தபோது முதற்கட்ட புலன்விசாரணை அதிகாரியிடம் கூறியதுபோலவே தன்னிடமும் கூறியதால் தான் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றும், பின்னர் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளை தேடி வந்த நிலையில் கிடைத்த ரகசிய தகவலின்பேரில் 03.02.2025 – ஆம் தேதி திண்டுக்கல் மாவட்டம், காமநாயக்கன்பட்டி பேருந்து நிறுத்தம் சென்று தகவலாளி அடையாளம் காட்டிய 1 – ஆம் எதிரியை பகல் 14.00 மணிக்கு கைது செய்து தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்ததாகவும், 2 – ஆம் எதிரி மாண்புமிக உதகை மாவட்ட நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்றுள்ளதால் அவரை

கைது செய்யவில்லை என்றும்,

(iv) பின்னிட்டு இவ்வழக்கை பதிவு செய்த தலைமை காவலர் மற்றும் முதற்கட்ட புலன்விசாரணை மேற்கொண்ட குன்னூர் நகர காவல் ஆய்வாளர் சதீஷ்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னிட்டு அன்றையதினமே இவ்வழக்கின் சட்டப்பிரிவை பிரிவு.292, 196(1)(a) BNS r/w 4 of TNOPPD Act – லிருந்து 192 BNS r/w 4 of TNOPPD Act – ஆக மாற்றம் செய்து **அ.சா.ஆ.10** சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், அத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து மேற்படி சட்டப்பிரிவுகளின் கீழ் எதிரிகள் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன் என்று கூறி சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

5. அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து எதிரிகளுக்குப் பாதகமாக தோன்றும் சாட்சியம் குறித்து எதிரிகளிடம் குவிமுச.313(1)(ஆ) பிரிவின் படி விசாரணை செய்த போது எதிரிகள் குற்றத்தை மறுத்தனர். மேலும் எதிரிகள் தரப்பில் வாய் மொழி சாட்சியம் மற்றும் ஆவண சாட்சியம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனவே எதிரி தரப்பில் சாட்சியங்கள் எதுவும் இல்லை.

**6. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில் எதிரிகள் மீதான குற்றம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.**

<u>பிரச்சனை:–</u>

கடந்த 31.01.2025 – ஆம் தேதி மாலை 17.00 மணியளவில் கொலக்கொம்பை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மணியாபுரம் பேருந்து நிறுத்தத்தில் 1, 2 எதிரிகள் ஒன்று சேர்ந்து எந்தவித அனுமதியின்றி பொதுஇடத்தின் அழகை சீர்குலைக்கும் வகையில் துண்டு பிரசாரத்தை பொது இடமான மணியாபுரம் பேருந்து நிறுத்தத்தில் ஒட்டியுள்ள குற்றத்திற்காக 1, 2 எதிரிகள் சட்டப்பிரிவு. 4(1) TNOPPD Act – இன் படியும், பின்னிட்டு அதே சம்பவத்தின் தொடர்ச்சியாக, 1, 2 எதிரிகள் ஒன்று சேர்ந்து 04.02.2025

– ஆம் தேதி திருப்பரங்குன்றத்தில் திருப்பரங்குன்ற மலையை காக்க இந்து சமயம் சார்பாக போராட்டம் நடத்தப்போவதாகவும் அதில் இந்து மதத்தை சேர்ந்தவர்களை கலந்து கொள்ளுமாறு இந்து சமுதாய மக்களிடம் கோபத்தை தூண்டி கலகத்தை செய்ய சட்ட விரோத வாசகங்கள் அடங்கிய துண்டு பிரசூரங்களை விநியோகித்து போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ள குற்றத்திற்காக 1, 2 எதிரிகள் சட்டப்பிரிவு. 192 BNS – இன் படியும் குற்றம் புரிந்துள்ளதாகவும் கொலக்கொம்பை காவல்நிலைய காவல் உதவி ஆய்வாளரால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7. தீர்வு:-**

இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. சாட்சி சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

8. கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது, **அ.சா.1** முதல் **அ.சா.7** வரையிலான சாட்சியங்கள் மூலமாகவும், **அ.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.10** வரையிலான சான்றாவணங்கள் மூலமாகவும் அரசு தரப்பு வழக்கினை மெய்ப்பித்துள்ளதாகவும் எனவே, எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று கூறி வாதிட்டார்.

9. கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் தமது வாதத்தின் போது, எதிரிகள் அ.சா.ஆ.2 துண்டுப்பிரச்சாரத்தை ஒட்டியதற்கும், பொதுமக்களிடம் விநியோகம் செய்ததையும் பார்த்ததாக அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் சாட்சியமளித்திருந்தாலும் அவர்களின் சாட்சியங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டில்லுதாலும், அவர்கள் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம நிர்வாக உதவியாளர் என்பதால் அவர்கள் அரசு தரப்பிற்கு ஆதரவாக பொய்சாட்சியமளித்துள்ளதாகவும், அரசு தரப்பில் சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லப்பட்ட தனிப்பட்ட சாட்சியான அ.சா.6 சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளிக்கவில்லை என்பதிலிருந்தே எதிரிகளுக்கு எதிராக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளது நிருபணம் ஆவதாகவும், எனவே எதிரிகள் விடுதலை செய்யத்தகவர்கள் என்று கூறி வாதிட்டுள்ளார்.

**10.** அரசு தரப்பில் 1, 2 எதிரிகள் அனுமதியின்றி பொதுஇடத்தின் அழகை சீர்குலைக்கும் வகையில் 31.01.2026 – ஆம் தேதியில் திருப்பரங்குன்றம் மலையை காக்க இந்து சமயம் சார்பாக போராட்டம் நடத்தப்போவதாகவும், அதில் இந்து மதத்தை சேர்ந்தவர்கள் கலந்துகொள்ளுமாறு போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தும், இஸ்லாமிய மதத்தை சேர்ந்தவர்கள் திருப்பரங்குன்றம் மலையை சிக்கந்தர் மலை என்று உரிமை கொண்டாட முயற்சிப்பதாகவும், குறிப்பிட்டு அ.சா.ஆ.2 துண்டு பிரச்சுரத்தை பொதுஇடமான மணியாபுரம் பேருந்துநிலையத்தில் ஒட்டி மக்களிடம் கோவத்தை தூண்டி கலகத்தை செய்ய போராட்டதிற்கு அழைப்பு விடுத்ததாகவும் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது தெரியவருகின்றது.

**11.** இவ்வழக்கில் மணியாபுரம் பேருந்து நிறுத்தத்தில் அ.சா.ஆ.2 துண்டு பிரச்சுரம் ஒட்டப்பட்டிருந்ததாகவும், அதனை புலன் விசாரணை அதிகாரி அ.சா.3 மற்றும் அ.சா.4 சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியதையும் அ.சா.3 மற்றும் அ.சா.4 சாட்சிகள் மூலம் இந்நீதிமன்றத்தால் அறியமுடிகின்றது. அ.சா.ஆ.2 துண்டு பிரச்சுரத்தை பரிசீலனை செய்கையில் அதில் இவ்வழக்கின் எதிரிகள் பெயர்கள் காணப்படவில்லை என்பது தெரியவருகின்றது. எனவே, மேற்படி எதிரிகளின் மீது அரசு தரப்பு சுமத்திய குற்றச்சாட்டை நிரூபணம் செய்யவேண்டுமெனில் அரசு தரப்பு அ.சா.ஆ.2 துண்டு பிரச்சுரத்தை 1, 2 எதிரிகள் மணியாபுரம் பேருந்து நிறுத்தத்தில் ஒட்டினார்கள் என்றும், மேலும் அந்த துண்டு பிரச்சுரத்தை அங்குள்ள பொதுமக்களிடம் விநியோகம் செய்து பொதுமக்களிடம் கலகத்தை ஏற்படுத்தினார்கள் அல்லது முயற்சி செய்தார்கள் என்பதை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவேண்டும். அவ்வாறு அரசு தரப்பில் எதிரிகள் இருவரும் தான் அ.சா.ஆ.2 துண்டு பிரச்சுரத்தை மேற்படி பேருந்து நிறுத்தத்தில் ஒட்டியதையும், பொதுமக்களிடம் விநியோகம் செய்ததையும் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்துள்ளார்களா? என பரிசீலனை செய்கையில், அரசு தரப்பில் மேற்படி எதிரிகளின் குற்றச்செயலை நேரடியாக கண்ணுற்ற சாட்சியாக அ.சா.1, அ.சா.2, அ.சா.6 ஆகியோர்கள் விசாரணை செய்யப்பட்டுள்ளது தெரியவருகின்றது. அதில் அ.சா.1

மற்றும் அ.சா.2 சாட்சிகள் ஆகியோர்கள் அரசு அலுவலர்களான கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம நிர்வாக உதவியாளர் ஆவார்கள். அ.சா.6 தனிப்பட்ட சாட்சியாக இருந்தாலும் அவர் பிறழ் சாட்சியாக மாறியதால் அரசு தரப்பு வழக்கை அவர் நிரூபணம் செய்யவில்லை. எனவே தனிப்பட்ட சாட்சிகள் அல்லதா இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகளின் சாட்சியத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமெனில் மேற்படி இரண்டு சாட்சிகளின் சாட்சியங்களும் முரண்பாடில்லாமல் ஒன்றுக்கொன்று ஒத்து இருக்கவேண்டும்.

**12.** இதுகுறித்து இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 – இன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், அவர் தனது சாட்சியத்தில், தான் 31.01.2025 – ஆம் தேதி மதியம் 01.00 மணியளவில் தனது உதவியாளர் கருணாகரனுடன் மணியாபுரம் அருகே வந்தபோது மணியாபுரம் பேருந்து நிறுத்ததில் ஒரு நோட்டீஸ் ஒட்டப்பட்டிருந்தாகவும், அங்கு இந்து முன்னனியை சேர்ந்த எதிரிகள் இருவரும் இருந்ததாகவும், அவர்கள் எவ்வித முன் அனுமதியும் பெறாமல் மேற்படி நோட்டீஸை ஒட்டி இருந்ததாகவும் சாட்சியமளித்துள்ளது தெரியவருகின்றது. ஆனால் மேற்படி எதிரிகள் அ.சா.ஆ.2 துண்டு பிரச்சுரம் ஒட்டியதை தான் நேரில் கண்ணுற்றதாக அ.சா.1 சாட்சியமளிக்கவில்லை என்பது தெரியவருகின்றது. மேலும் அவரது சாட்சியத்தில், மேற்படி எதிரிகள் அ.சா.ஆ.2 துண்டு பிரசுரத்தை அந்த வழியாக வந்த பொதுமக்களிடம் விநியோகம் செய்து கொண்டிருந்ததாக சாட்சியமளித்துள்ளது தெரிவருகின்றது. ஆனால் அ.சா.1 அவரது புகார் மனுவில், மேற்படி எதிரிகள் பேருந்து நிறுத்தம் வழியாக வந்த பொதுமக்களிடம் அ.சா.ஆ.2 துண்டு பிரச்சுரத்தை விநியோகம் செய்ததாக குறிப்பிட்டு கூறவில்லை என்பது தெரியவருகின்றது. மாறாக, பொதுமக்களிடம் சென்று 1 – ஆம் எதிரி துண்டு பிரச்சுரங்களை அவரது விருப்பத்திற்கு மாறாக கொடுத்ததாகவும், அப்போது 2 – ஆம் எதிரியும் உடனிருந்ததாகவும் குறிப்பிட்டிருப்பது தெரியவருகின்றது. இவ்வாறு அ.சா.1 – இன் புகார் மனுவிற்கும், சாட்சியத்திற்கும் முரண்பாடு இருப்பதை பரிசீலனை செய்கையில், எதிரிகள் தான் அ.சா.1 கூறுவதுபோல் அ.சா.ஆ 2 துண்டு பிரச்சுரத்தை பேருந்து நிறுத்தத்தில் ஒட்டினார்களா என்றும்,

பொதுமக்களிடம் விநியோகம் செய்தார்களா என்பது குறித்தும் சந்தேகம் எழுவதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**13.** மேலும், அ.சா.1 – இன் உதவியாளரான அ.சா.2 அவரது சாட்சியத்தில், எதிரிகள் இருவரும் அ.சா.ஆ.2 துண்டு பிரச்சுரத்தை பேருந்து நிறுத்தத்தில் ஒட்டியது குறித்து எவ்வித சாட்சியும் அளிக்கவில்லை என்பது தெரியவருகின்றது. மேலும் அ.சா.2 அவரது சாட்சியத்தில், எதிரிகள் இருவரும் அ.சா.ஆ.2 துண்டு பிரச்சுரத்தை இந்து முன்னனி சார்பாக பொதுமக்களுக்கு விநியோகம் செய்ததாக சாட்சியமளித்துள்ளது தெரியவருகின்றது. அ.சா.1 – ம் அவரது சாட்சியத்தில் எதிரிகள் பொதுமக்களுக்கு அ.சா.ஆ.2 துண்டு பிரச்சுரத்தை விநியோகம் செய்ததாக சாட்சியமளித்துள்ளது தெரியவருகின்றது. மேற்படி 2 சாட்சிகளின் சாட்சியங்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் உள்ளதா என பரிசீலனை செய்கையில், அ.சா.1 அவரது முதல் விசாரணை சாட்சியத்தில், தான் சம்பவஇடத்திற்கு 01.00 மணிக்கு சென்றதாகவும், பின்பு அவரது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் சம்பவஇடத்தில் தான் 02.00 மணி வரை இருந்ததாகவும், அதாவது சம்பவஇடத்தில் சுமார் ஒரு மணி நேரம் அ.சா.1 இருந்ததாக சாட்சியமளித்துள்ளது தெரியவருகின்றது. அ.சா.1 அவரது சாட்சியத்தில் அவரது உதவியாளராக அ.சா.2 – டன் சம்பவஇடத்திற்கு சென்றதாக சாட்சியமளித்துள்ளது தெரியவருகின்றது. அ.சா.2 – ம் அவரது சாட்சியத்தில் தான் அ.சா.1 – டன் சம்பவஇடத்திற்கு சென்றதாகவும், அதன் பின்பு அலுவலகத்திற்கு சென்றுவிட்டு பின்பு அ.சா.1 மூலம் அ.சா.ஆ.1 புகார் கொடுக்கப்பட்டதாகவும் சாட்சியமளித்துள்ளது தெரியவருகின்றது. இவ்வாறு அ.சா.1 சம்பவஇடத்தில் ஒரு மணி நேரம் இருந்ததாக சாட்சியமளித்துள்ள நிலையில் அ.சா.2 அவரது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், சம்பவஇடத்தில் தான் சுமார் 20 நிமிடங்கள் இருந்ததாக சாட்சியமளித்துள்ளது தெரியவருகின்றது.

**14.** மேலும் அ.சா.1 அவரது சாட்சியத்தில், தான் தனது அலுவலகத்தில் அ.சா.ஆ.1 புகார் மனுவை எழுதியதாகவும், காவல் நிலையத்தில் வைத்து எழுதவில்லை

என்று சாட்சியமளித்துள்ள நிலையில் அ.சா.2 அவரது சாட்சியத்தில், அ.சா.ஆ 1 புகார் மனுவை காவல் நிலையத்தில் வைத்து எழுதியதாக சாட்சியமளித்துள்ளது தெரியவருகின்றது. மேலும், அ.சா.ஆ.1 புகார் மனுவை பரிசீலனை செய்கையில் அவர் தன்னுடன் அ.சா.2 சம்பவஇடத்திற்கு வந்ததாக குறிப்பிட்டு கூறிவில்லை என்பது தெரியவருகின்றது. இவ்வாறு அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகளின் சாட்சியங்களுக்கு இடையேயான முரண்பாடுகளை பரிசீலனை செய்கையில் மேற்படி சாட்சிகளின் சாட்சியங்கள் நம்பத்தகுந்ததாக இல்லை என்றும், இவர்களின் சாட்சியங்களை மட்டும் வைத்துக்கொண்டு எதிரிகள் மீது குற்றப்பொறுப்பு சுமத்த இயலாது என இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும் இவ்வழக்கின் தனிப்பட்ட கண்ணுற்ற சாட்சியான அ.சா.6 ம் அரசு தரப்பு வழக்கை ஊர்ஜிதம் செய்யும் வகையில் சாட்சியமளிக்காமல் பிறழ் சாட்சியாக மாறியதால் எதிரிகள் தான் மணியாபுரம் பேருந்து நிறுத்தத்தில் அ.சா.ஆ 2 துண்டு பிரச்சுரத்தை ஒட்டியதாகவோ, பொதுமக்களிடம் அதை விநியோகம் செய்ததாகவோ அரசு தரப்பு நிரூபணம் செய்ததாக கருதஇயலாது என இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும் அரசு தரப்பில் எதிரிகள் விநியோகம் செய்ததாக கூறப்படும் பொதுமக்களின் பெயர்களையோ யாரிடம் அவர்கள் விநியோகம் செய்தார்களோ அவர்களில் எவரையும் ஒரு சாட்சியாக அரசு தரப்பில் விசாரணை செய்யவில்லை என்பது தெரியவருகின்றது. எனவே எதிரிகள் மீதான குற்றச்சாட்டை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**15.** மேற்கண்ட ஆய்விலிருந்து அரசு தரப்பானது எதிரி மீதான பிரிவு. 4(1) TNOPPD Act, 192 BNS – இன் படியான குற்றம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபிக்க தவறி விட்டது என்றும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்வது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்குமென்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**<u>16. முடிவு:-</u>**

**இறுதியாக,** 1, 2 வரையிலான எதிரிகள் மீதான சட்டப்பிரிவு. 4(1) TNOPPD Act,

192 BNS – இன் கீழான குற்றம் அரசுதரப்பில் போதிய சாட்சிய சான்றாவணங்கள் மூலம் சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு நிருபிக்கப்படவில்லை என்பதால், எதிரிகளை மேற்படியான குற்றத்திற்கு குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து கு.வி.மு.ச. பிரிவு.255(1)–இன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**17. சான்று பொருட்களின் மீதான உத்தரவு:–**

இவ்வழக்கில் பி.ஆர்.19/2025 - இல் தாக்கல் செய்யப்பட்டுள்ள துண்டு பிரசுரம் சுவரொட்டி ஒன்று (கிழிந்த நிலையில் உள்ளது) அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.ஆ.2 நீதிமன்ற பொறுப்பில் இருப்பதை மேல்முறையீடு காலத்திற்குப்பின் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

எதிரிகள் ஏற்கனவே பிணையில் இருந்து வந்துள்ள நிலையில் மேல்முறையீட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல்முறையீடு செய்யவில்லையெனில் எதிரிகளின் பிணை பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் வடிக்கப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 – ஆம் ஆண்டு ஜீன் மாதம் 22 – ஆம் நாள் திங்கள்கிழமை என்னால் அவையறிய பகரப்பட்டது.

//ஒம்.//R. கீதா,
விரைவு நீதித்துறை நடுவர்,
குன்னூர்.
*(FAC)* நீதித்துறை நடுவர், குன்னூர்.

**பின்சேர்க்கை :–**
**அரசு தரப்பு சாட்சிகள் :–**

| Persecution Witnesses No. | Name of the Witnesses | Description |
|---|---|---|
| அ.சா.1 | திருமதி. சுபத்ரா. | புகார்தாரர். |

| | | |
|---|---|---|
| அ.சா.2 | திரு. கருணாகரன். | கண்ணுற்ற சாட்சி. |
| அ.சா.3 | திரு. முனுசாமி. | மகசர் சாட்சி. |
| அ.சா.4 | திரு. ராமஜெயம். | மகசர் சாட்சி. |
| அ.சா.5 | திரு. மகேஷ்குமார், தலைமை காவலர், கொலக்கொம்பை காவல் நிலையம். | புலன் விசாரணை அதிகாரி. |
| அ.சா.6 | திரு. நாகராஜ். | கண்ணுற்ற சாட்சி. |
| அ.சா.7 | திரு. அன்பரசு, ஆய்வாளர், கொலக்கொம்பை காவல் நிலையம். | மேல் புலன் விசாரணை அதிகாரி. |

**<u>அரசுதரப்பு சான்றாவணங்கள் :–</u>**

| *Exhibits No.* | *Date* | *Description of Exhibits* | *Proved by/ Attested by* |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 31.01.2025 | புகார்மனு. | அ.சா.1. |
| அ.சா.ஆ.2 | -- | நோட்டீஸ். | அ.சா.1. |
| அ.சா.ஆ.3 | 31.01.2025 | பார்வை மகசர். | அ.சா.3. |
| அ.சா.ஆ.4 | 31.01.2025 | கைப்பற்றுதல் மகசரில் கண்டுள்ள அ.சா.3 – இன் கையொப்பம். | அ.சா.3. |
| அ.சா.ஆ.5 | 31.01.2025 | கைப்பற்றுதல் மகசரில் கண்டுள்ள அ.சா.4 – இன் கையொப்பம். | அ.சா.4. |
| அ.சா.ஆ.6 | 31.01.2025 | முதல் தகவல் அறிக்கை. | அ.சா.5. |
| அ.சா.ஆ.7 | 31.01.2025 | மாதிரி வரைபடம். | அ.சா.7. |
| அ.சா.ஆ.8 | 31.01.2025 | கைப்பற்றுதல் மகசர். | அ.சா.7. |
| அ.சா.ஆ.9 | 31.01.2025 | படிவம் – 91. | அ.சா.7. |
| அ.சா.ஆ.10 | 10.03.2025 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை. | அ.சா.7. |

**<u>அரசுதரப்பு சான்றுபொருள் :–</u>**
இல்லை.
**<u>எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள்</u>** :–
இல்லை.

**<u>குறிப்பு:–</u>**

1) விசாரணை காலத்தில் 1 முதல் 3 வரையிலான எதிரிகள் பிணையில் இருந்துள்ளார்கள்.

2) வழக்கின் சாட்சிகள் 3 வாய்தாவிற்கு மேல் விசாரணையின்றி நிறுத்தப்படவில்லை.

3) வழக்கின் முடிவு சம்பந்தப்பட்ட காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

//ஒம்.//R. கீதா,
விரைவு நீதித்துறை நடுவர்,
குன்னூர்.
*(FAC)* நீதித்துறை நடுவர், குன்னூர்.

//உண்மை நகல்//

//ஒம்.//R. கீதா,
விரைவு நீதித்துறை நடுவர்,
குன்னூர்.
*(FAC)* நீதித்துறை நடுவர், குன்னூர்.